1969 மார்ச் 7]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பதவியில் இருக்கிருரா அல்லது இல்லையா ? இல்லை என்றால், என்ன காரணம் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தற்போது பதவியில் இல்லை. வேண்டாம் என்று துறந்து விட்டார்.

திரு. கே. விநயகம் : அந்த நகர மன்றத் தலைவர் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது தெரியுமா ? தீர்மானம் கொண்டு வந்து போதிய அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு வராததால், கையெழுத்துப் போட்டிருந்தும் வராததால், தீர்மானம் விவாதத்திற்கு வரவில்லையா ? இந்த இரண்டு தகவல்களும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தக் கேள்வியின் கருத்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதுபற்றி அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டதா என்பது. நமக்குக் கிடைத்திருக்கும் தகவல் படி, தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் படும்போது, உறுப்பினர்கள் நகராட்சிக் கூட்டத்திற்குச் செல்லவில்லை என் பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

தஞ்சாவூர் மாவட்ட கிராம சேவக்குகள்.

*225 வினு. **திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட முதல் நிலை கிராம சேவக்குகளுக்கு பஞ்சா யத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் பதவி உயர்வுக்கான Panel list தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 1966-ம் ஆண்டு மாநில கிராம நலத்துறை இயக்குநருக்கு அனுப்பியும் இது நாள் வரை அதை அனுமதிக்காமலும், பதவி உயர்வு கொடுக்காமலும், இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(இ) இந்த வினு எழவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த மாதிரிப் பிரமோஷனில், "பிறர் பெயர் முன்னால் போயிருக்கிறது. என் பெயர் பின்னால் போய்விட்டது" என்கிற புகார்கள் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? புகார் இல்லாமல், இன்ன வரிசைக்கிரமத்தில் பிரமோஷன் கொடுக்க வேண்டும் என்கிற விதிமுறைகள் ஏதாவது வகுக்கப் பட்டிருக் கிறதா ? அது பின்பற்றப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபோன்ற பதவி உயர்வு களுக்கு பரிந்துரைகள் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலை வர் கேட்டுக் கொள்ளப் படுகிறார். தகுதியை ஆராய்ந்து, பெயர்களை ஆய்வு செய்யும் பொறுப்பை கிராம வளர்ச்சி இயக்குநர் மேற்கொண்டிருக்கிறார். தேவையான சரியான குறிப்புகள் இல்லையென்றோ, வேலைத் திறமை குறைவாக இருப்பதாலோ, ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பை கிராம வளர்ச்சி இயக்குநர் ஏற்றிருக்கிறார். இறுதியாகத் தயார் செய்யப்பட்ட அந்த பட்டியலிலிருந்து பதவி உயர்வுகள் கொடுக்கப் படுகின்றன.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, எத்தனை பேர்களை பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருக்கிறார் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருப்பது : 67 பேர்கள்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் கிராம நல ஊழியர்களுக்கு பழைய 1964–65 ஆண்டுகளில் உரிய காலத்தில் அவர்களுடைய "பேனல் லிஸ்டு" அனுப்பாமல், 66-ம் ஆண்டு ஏப்ரலில் அனுப்பியும், அப்போதைய அரசாங்கம் ஏறத்தாழ ஒன்பது மாதம் தாமதப்படுத்தி, 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் தேதியில் அவர்களுக்கு உத்தியோக உயர்வு அளித்தும், அதன் பிறகு 1967-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதியில் அப்படிப் பதவி உயர்வு அளிக்கப் பட்டவர்களுக்கு போதிய இலாகா தேர்வுகளில் தகுதி இல்லாவிடின் பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தின் பிந்திய தீர்மான் மாகிவிட்டதால், இடையில் இருக்கும் 12 நாட்களுக்கு விதிவிலக்கு அளித்து அவர்களுக்கு பதவி உயர்வை ஊர்ஜிதம் செய்ய சர்க்கார் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : விதிமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கிராம நல ஊழியர்கள் எவ்வளவு பேர்களை சிபாரிசு செய்தார்கள். டி.ஆர்.டி. அவர்களின் பரிந்துரையின் பேரில் உயர்வு கொடுக்க அங்கீகாரம் எவ்வளவு பேர்களுக்கு கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தஞ்சை மாவட்டத்தில் 67 பேர்கள் அனுப்பப் பட்டனர். இறுதியாக பரிசீலனை செய்து, குற்றங்குறைகளைக் களைந்து அங்கீகாரம் கொடுக்கப்பட்டது 32 பேர்களுக்கு, அந்த வகையில் இறுதியான பட்டியல் தயார் செய்யப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பதவிகளை முருகேச முதலியார் ரிப்போர்ட்டின்படி, அதைப் பின்பற்றித் தான் செய்யப் படுகிறதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1958 ஊராட்சி மன்றங்கள் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்கள், விதிகள் படி பதவிகள் கொடுக்கப் படுகின்றன.

காபி, தேயிலை பயிரிடுவோருக்கு அரசு நிலம் குத்தகை.

*206. வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் காபி, டீ எஸ்டேட்கள் நடத்துபவர்கள் எத்தனை பேர்களுக்குச் சர்க்கார் நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது ?

(இ) அதற்கான வாடகை என்ன ?

(உ) எந்த ஆண்டு முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) முதல் (உ) வரை: சட்டப் பேரவை முன் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையில் கண்டுள்ளபடி, காபி, டீ எஸ்டேட்டுகள் நடத்தக் கூடியவர்களுக்கு, குத்தகை எக்கருக்கு ரூ. 20 ஆண்டுக்கு என்றிருக்கிறது. அப்படியென்றால் மாதம் ரூ. 1·66 என்று ஆகிறது. அந்த அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கப்படுகிறதே, அதே அடிப்படையில், சிறு விவசாயிகள், நிலம் இல்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு, நிலம் வாடகைக்குக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்படிப்பட்ட வாடகை அடிப்படையே 1800-ம் வருஷத்திலிருந்து 1961 முடிய, பழைய சர்க்கார்கள், முன்னால் இருந்த சர்க்கார் என்று கூடச் சொல்ல முடியாது, அவர்கள்

* 578–581-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.